# பாலர் கல்வி



அமரர் திரு முத்துலிங்கம் தயாபரன்

*(Queens Mary University Engineer)*

அவர்களின் நினைவாக வெளியிடப்படுகிறது

***04.11.99***


ஆசிரியர்: திருமதி செல்வநாயகி மகாலிங்கம்



*(London Tamil Society)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர் எழுத்துக்கள்

அப்பா  ஆடு 


இலை  ஈ 


உலகம் 


ஊஞ்சல் 

எலி  ஏணி 

ஐந்து 5 ஒன்பது 9

ஓடம்  ஔவையார் 

எஃகு 

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகர வரிசைச் சொற்கள்

| | |
|---|---|
| அ | அம்மா<br>அப்பா<br>அக்கா<br>அணில் |
| ஆ | ஆடு<br>ஆமை<br>ஆந்தை<br>ஆலயம் |
| இ | இலை<br>இதயம்<br>இறகு<br>இடியப்பம் |
| ஈ | ஈ<br>ஈட்டி<br>ஈரம்<br>ஈகை |
| உ | உலகம்<br>உப்பு<br>உணவு<br>உடல் |
| ஊ | ஊசி<br>ஊஞ்சல்<br>ஊர்<br>ஊமை |
| எ | எலி<br>எட்டு<br>எருது<br>எறும்பு |
| ஏ | ஏணி<br>ஏடு<br>ஏர்<br>ஏக்கம் |
| ஐ | ஐந்து<br>ஐயர்<br>ஐயம்<br>ஐவர் |
| ஒ | ஒன்று<br>ஒட்டகம்<br>ஒழுக்கு<br>ஒளி |
| ஓ | ஓலை<br>ஓடம்<br>ஓடு<br>ஓரம் |
| ஔ | ஔவையார்<br>ஔடதம் |
| ஃ | எஃகு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுங்கு படுத்தி எழுதவும்

அ ஃ ஐ

ஏ ஒ ஔ

ஊ ஈ எ

இ உ ஓ

ஆ

அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்கள் எழுதவும்
# Write the Words

க்கா

ம்மா அ ண்ணா

ப்பா


---

இடைவெளி நிரப்புக. Fill in the blanks


1. _ ந்தை
2. _ சி
3. _ ணில்
4. _ டம்
5. _ வர்
6. _ ஞ்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# படங்களை சொற்களுடன் தொடர்புபடுத்துக




கை




எலி



கோழி



முயல்




பூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# படங்களின் பெயர்களை எழுதுக




------------------------




------------------------




------------------------



------------------------




------------------------




------------------------




------------------------



------------------------



------------------------



------------------------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்கள்


நில்


நட


உட்கார்


ஓடு


தாண்டு


எழுது


சாப்பிடு


குடி


படி


நீந்து


விளையாடு


உறங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்துக்களைக் கொண்டு சொல் ஆக்குதல்

"ஆ" என்ற எழுத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் 5 சொற்கள் எழுதுக.

.............. .............. .............. ............ ............

"ப" என்ற எழுத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் 5 சொற்கள் எழுதுக.

.............. .............. .............. ............ ............

"க" என்ற எழுத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் 5 சொற்கள் எழுதுக.

.............. .............. .............. ............ ............

"மா" என்ற எழுத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் 5 சொற்கள் எழுதுக.

.............. .............. .............. ............ ............

"வ" என்ற எழுத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் 5 சொற்கள் எழுதுக.

.............. .............. .............. ............ ............

"த" என்ற எழுத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் 5 சொற்கள் எழுதுக.

.............. .............. .............. ............ ............

"ச" என்ற எழுத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் 5 சொற்கள் எழுதுக.

.............. .............. .............. ............ ............

"இ" என்ற எழுத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் 5 சொற்கள் எழுதுக.


.............. .............. .............. ............ ............

"உ" என்ற எழுத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் 5 சொற்கள் எழுதுக.

.............. .............. .............. ............ ............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படம் பார்த்துப்படி - எழுது

1. இது ஒரு  ........................................


2. நான் ஒரு  ........................ தின்றேன்.

3.  ........................ எலி பிடிக்கும்.

4.  ........................ கிழக்கில் உதிக்கும்.

5. கமலா  ........................ ஆடுகிறாள்.

6.  ........................ மழையில் பிடிக்க உதவும்.


7.  ........................ தலை சீவ உதவும்.

8.  ........................ கடலில் மிதக்கும்.

9.  ........................ வெட்ட உதவும்.

10.  ........................ தண்ணீரில் வசிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒன்றும் ஒன்றும்

ஒன்றும் ஒன்றும் இரண்டு
பூவில் இருப்பது வண்டு.
இரண்டும் இரண்டும் நான்கு;
இனிப்பாய் இருக்கும் தேங்காய்
மூன்றும் மூன்றும் ஆறு;
வேலை செய்தால் சோறு.
நான்கும் நான்கும் எட்டு;
நன்றாய்ப் பாடுவாள் பட்டு.
ஐந்தும் ஐந்தும் பத்து;
அன்பே நமது சொத்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் உறுப்புகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலி




எலி ஒரு சிறிய மிருகம்.

எலி பொந்துகளில் வாழும்.

எலி தானியங்கள் பழங்கள் தின்னும்.

# முயல்




முயல் அழகான மிருகம்.

முயல் வேகமாக ஓடும்.

முயல் இலைகள் மரக்கறி வகைகள் உண்ணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரி



நரி ஒரு தந்திரமுள்ள மிருகம்.

நரி காட்டில் வாழும்.

நரி ஊளையிடும்.

## 1. இடைவெளி நிரப்புக

1. ஒ...று 2. இர...டு 3.மூ...று 4.நா...கு 5. ஐ...து

6. ஆ... 7.ஏ... 8. எ...டு 9.ஒ...பது 10.ப...து

2. "டு" என்ற சொல்லில் முடியும் 5 சொற்கள் எழுதுக

.......................................................................

"டி" என்ற சொல்லில் முடியும் 5 சொற்கள் எழுதுக

.......................................................................

"கு" என்ற சொல்லில் முடியும் 5 சொற்கள் எழுதுக

.......................................................................

"து" என்ற சொல்லில் முடியும் 5 சொற்கள் எழுதுக


.......................................................................

"று" என்ற சொல்லில் முடியும் 5 சொற்கள் எழுதுக

.......................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்



மீன் நீரில் வாழும்.


சிலர் வீட்டில் மீனை வளர்ப்பார்கள்.

மீனுக்குச் செதில்கள் உண்டு.


மீன் வாலின் உதவியால் நீந்தும்

மீன் நீரில் உள்ள பூச்சி புழுக்களை உண்ணும்

## "கடல்" என்ற சொல்லுக்குத் தொடர்பு உள்ள சொற்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொருத்தமான
சொல்லைக் கோட்டின்
நேர் எழுதுக

வாய்
கொம்பு
கால்
வால்
கண்




பொருத்தமான
சொல்லைக் கோட்டின்
நேர் எழுதுக

குருவி
இலை
கூடு
அணில்
மரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருகங்கள்


நாய்




பசு



ஆடு




பூனை




எருது




பன்றி




யானை



குரங்கு



புலி




சிங்கம்



கரடி




குதிரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைகள்

குருவி




சேவல்



ஆந்தை



காகம்




கோழி



மைனா



கிளி




கொக்கு




வாத்து



புறா



மயில்




கழுகு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்கள்

மாம்பழம்



திராட்சைப்பழம்




பலாப்பழம்




மாதுளம்பழம்



வாழைப்பழம்



அன்னாசிப்பழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணில்



அணில் ஒரு மிருகம்.

அணில் அழகானது.

அணில் பழம் உண்ணும்.

அணில் குட்டி போடும்.

அணில் சுறுசுறுப்பானது.

அணில் மரத்தில் கூடு கட்டும்.

அணில் தாவித்தாவி ஓடும்.

## பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுக


1. அணில் ஒரு (பறவை, மிருகம்).

2. அணில் ( பழம், இறைச்சி) உண்ணும்.

3. அணில் (மரத்தில், நிலத்தில்) கூடு கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம்



இது ஒரு மரம்.

மரம் உயர்ந்து வளரும்.

மரத்திற்கு வேர் உண்டு.

மரத்தில் இலைகள் உண்டு.

மரத்தில் பூப்பூக்கும்.

மரத்தில் காய் காய்க்கும்.

பின்பு பழம் பழுக்கும்.

மரம் நிழல் தரும்.


மரத்தில் இருந்து தளபாடங்கள் செய்யலாம்.

மரத்தின் பகுதிகளை எழுதுக.

1. ..................
2. ..................
3. ..................
4. ..................
5. ..................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்




நாய் ஒரு வீட்டு மிருகம்.
நாய் வீட்டைக் காக்கும்
நாய் குரைக்கும்.
நாய் வாலை ஆட்டும்.
நாய் மாமிசம் உண்ணும்.
நாய் நன்றி உள்ள மிருகம்.

## இடைவெளி நிரப்புக.

1. நாய் ------- மிருகம்.
2. நாய் -- ஆட்டும்.
3. நாய் ---- உண்ணும்.
4. நாய் --- உள்ள மிருகம்.
5. நாய் ---- காக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கம்



சிங்கம் ஒரு காட்டு மிருகம்.

சிங்கம் அதிக வலிமை உடையது.

சிங்கத்தின் பற்கள் கூர்மையானவை.

சிங்கம் காட்டுக்கு இராசா என்பர்.

சிங்கம் கர்ச்சிக்கும்.

சிங்கம் வேகமாகப் பாய்ந்து ஓடும்.

## ஒழுங்குபடுத்தி வசனம் அமைக்கவும்.

1. காட்டு சிங்கம் மிருகம்

-------------------------

2. ஓடும் சிங்கம் வேகமாக

-------------------------

3. வலிமை உடையது சிங்கம் அதிக


-------------------------

4. கூர்மையானவை சிங்கத்தின் பற்கள்

-------------------------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை




யானை ஒரு பெரிய மிருகம்.
அது காட்டு மிருகம்.
யானைகள் கூட்டமாக வாழும்.
யானையின் கண்கள் சிறியவை.
காதுகள் பெரியவை.
யானை இலை குழைகள் உண்ணும்.
யானைக்கு இரண்டு தந்தங்கள் உண்டு.
ஒரு தும்பிக்கை உண்டு.
யானை மிகவும் பலம் வாய்ந்தது.
யானை பிளிறும்.
யானை ஞாபகசக்தியுள்ள மிருகம்.

## இடைவெளி நிரப்புக.

1. யானை ஒரு ---- மிருகம்.
2. யானையின் கண்கள் ------.
3. யானையின் காதுகள் ------.
4. யானை ----- ------- உண்ணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழி



கோழி ஒரு பறவை.

கோழி முட்டை இடும்.

முட்டையில் இருந்து குஞ்சு பொரிக்கும்.

கோழிமுட்டை சத்துள்ள உணவாகும்.

கோழி தானியம் தின்னும்.

அது பூச்சி புழுக்களைத் தின்னும்.

## இடைவெளி நிரப்புக.


1. கோழி ஒரு -----.
2. கோழி முட்டை ------.
3. முட்டை சத்துள்ள -----.
4. முட்டையில் இருந்து ----- வரும்.

ஒழுங்கான சொல் அமைக்கவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ட்டைமு | சுஞ்கு | ம்இடு | ழுபு | ணஉவு |
| ---- | --- | --- | -- | --- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயில்



மயில் ஒரு பறவை.

மயில் ஒரு அழகிய பறவை.

அதன் தோகை அழகானது.

தோகையில் பல நிறங்கள் உண்டு.

மயில் ஆடும்.

மயில் அகவும்.

## பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1.மயில் ஒரு (பறவை, மிருகம்)

2.மயில் (பாடும், ஆடும்)

3. மயிலுக்கு (கை, தோகை) உண்டு.

## வித்தியாசமான சொல்லைக் கீறிடுக.

1. மயில் காகம் குரங்கு புறா

2. கை கால் தலை மீன்

3. படி தடி பால் கடி

4. சீனி நீர் மண் உப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி








தீபாவளி ஐப்பசி மாதத்தில் வரும்.
இது இந்துக்களின் திருநாள்.
துன்பம் நீங்கி இன்பம் வந்த நாள்.
குளித்து, புதிய ஆடை அணிந்து
கோயிலுக்குப் போவோம்.
உறவினர்களின் வீடுகளுக்குப் போவோம்.
அங்கு இனிமையான சாப்பாடுகள் பரிமாறுவார்கள்.
சந்தோசமான அன்று பொழுதைக் கழிப்போம்.

## இடைவெளி நிரப்புக.

1. தீபாவளி – – – – மாதத்தில் வரும்.
2. இது – – – – – – – – திருநாள்.
3. – – – – – – நீங்கி – – – – வந்த நாள்.
4. – – – – – – – – – – வீட்டுக்குப் போவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்லவும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓடி விளையாடு பாப்பா, — நீ
ஓய்ந்திருக்க லாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா — ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.
கொத்தித் திரியுமந்தக் கோழி — அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடுமந்தக் காக்காய் — அதற்
கிரக்கப் படவேணும் பாப்பா.
பாலைப் பொழிந்து தரும், பாப்பா — அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா,
வாலைக் குழைத்துவரும் நாய்தான் — அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

அறம் செய விரும்பு.

ஆறுவது சினம்.

இயல்வது கரவேல்.

ஈவது விலக்கேல்.

உடையது விளம்பேல்.

ஊக்கமது கைவிடேல்.

எண்ணெழுத்திகழேல்.

ஏற்பது இகழ்ச்சி.

ஐயம் இட்டுண்.

ஒப்புர வொழுகு.

ஓதுவது ஒழியேல்.

ஔவியம் பேசேல்.

அஃகம் சுருக்கேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எப்பொழுதும் காக்கும் அறிவு

கடும் கோடை காலம். காகம் ஒன்று தண்ணீர் தேடி அலைந்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. தாகத்தினால் தவித்தது அது.

சிறிது தூரத்தில் இருந்த பானை அதன் கண்களில் பட்டது. தண்ணீர் இருக்கும் என்ற ஆர்வத்துடன் பானையைப் பார்த்தது அது அடியில் சிறிது நீர் இருந்தது.

அந்த நீரைக் குடிக்க முயற்சி செய்தது காகம். தன் கழுத்தை எப்படி எல்லாமோ பானைக்குள் நுழைத்துப்பார்த்தது. அடியில் இருந்த நீர் அதன் வாய்க்கு எட்டவில்லை.

"தண்ணீர் இருக்கிறது. ஆனால்குடிக்க முடியவில்லையே என்ன செய்வது" என்று சிந்தித்தது காகம்.

பானையின் அருகில் கிடந்த கூழாங்கற்களைக் காகம் பார்த்தது.

ஒவ்வொரு கல்லாக எடுத்துப்பானைக்குள் போட்டது.

கற்கள் நீருக்குள் மூழ்கின. அதனால் நீரின் மட்டம் சிறிது சிறிதாக உயர்ந்தது.

சிறிது நேரத்தில் நீர் மட்டம் பானையின் கழுத்து வரை வந்தது.

எளிதாக அந்த நீரைக் குடித்து மகிழ்ந்தது காகம். பிறகு அங்கிருந்து பறந்து சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஒற்றுமையே வலிமை

காட்டில் நான்கு எருதுகள் ஒற்றுமையாக இருந்தன எப்பொழுதும் அவை ஒன்றாகவே மேயச் சென்றன.

கொழுத்திருந்த அந்த எருதுகளைச் சிங்கம் ஒன்று பார்த்தது. அதன் நாக்கில் எச்சில் ஊறியது.

கொன்று தின்ன நினைத்த சிங்கம் அவற்றின் மீது பாய்ந்தது. உடனேநான்கு எருதுகளும் ஒன்று சேர்ந்தன. தங்கள் கூரிய கொம்புகளால் சிங்கத்தைத் தாக்கின. காயம் அடைந்த சிங்கம் அங்கிருந்து ஓடிவிட்டது.

நரி ஒன்றைச் சந்தித்தது சிங்கம். "அந்த எருதுகளுக்கு இடையே எப்படியாவது சண்டையை ஏற்படுத்து. அவை பிரிந்து விடும். அவற்றின் இறைச்சியில் உனக்கும் ஒரு பங்கு தருகிறேன்" என்றது அது.

தந்திரசாலியான நரி எருதுகளிடம் வந்தது. அவற்றிடம் அன்பாக இருப்பது போல நடித்தது. அவற்றிற்குள் வேற்றுமையை உண்டாக்கமுயற்சி செய்தது.

அதன் சூழ்ச்சி வெற்றி பெற்றது. நான்கு எருதுகளும் சண்டையிட்டுக் கொண்டன.

நான்கு எருதுகளும் தனித்தனியே பிரிந்தன. அவை வெவ்வேறு இடங்களில் மேயத் தொடங்கின.

தன் எண்ணம் நிறைவேறியதைக்கண்டு மகிழ்ந்தது சிங்கம். தனித் திருந்த எருதுகளை எளிதாகக் கொன்று தின்றது அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிச்சுவடி

## உயிர் எழுத்துக்கள்

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ

ஒ ஓ ஔ ஃ


## மெய் எழுத்துக்கள்

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ்

ழ் ள் ற் ன்

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ | க் |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ | த் |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ | ப் |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ | ன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

# அமரர் திரு முத்துலிங்கம் தயாபரன்

தாய் மடியில்
11.08.1973

இறைவனடியில்
05.10.1999




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் கல்வி




அமரர் திரு முத்துலிங்கம் தயாபரன்
அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட இந்நூலைக் கவனமாகவும்,
தூய்மையாகவும் பாவித்து, படித்து முழுப்பயனையும் அடையும்
வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.
பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர்கள்
மேலதிக தொடர்புகட்கு தொலைபேசி இல: 0181 - 574 7955

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அச்சுப்பதிப்பு ஜே ஆர் அச்சகம் இலண்டன்: தொலைபேசி இல: 0181 - 503 6643

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org